**STC.NO. 1/2019**

**Deposition of Witness for:** வா சா 1 குறுக்கு விசாரணை

**Date:19.01.2021**

**Name: திரு. பிரபு த/பெ.பொங்கியண்ணன்.**

சாட்சி மனுவின் மீது அனுமதிக்கப்பட்டு மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

இவ்வழக்கில் மாதம் தோறும் எனக்கு வருமானம் வருவதை காண்பிக்க எந்த ஒரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் எனக்கு வழக்கறிஞர் தொழில் மூலமாக வருமானம் வருகிறது. வழக்கறிஞர் தொழில் மூலமாக வருமானம் வருகிறது என்பதை காண்பிக்கவும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதசாஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு, புகார், பிரமாணவாக்குமூலம் ஆகியவற்றில் எந்த இடத்தில் வைத்து எத்தனை மணிக்கு யார் முன்னிலையில் காசோலைத்தொகை எதிரியிடம் வழங்கப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எனது முகவரியில் வைத்து கடன் அளிக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன். ஆனால் எத்தனை மணிக்கு யார் முன்னிலையில் தரப்பட்டது என்று மட்டும் குறிப்பிடவில்லை.

எதிரி தரப்பு வழக்கறிஞரின்வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.